# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1994 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, வலகெதர சிறீநிவாஸ புஸ்தகால பிரிவேன் விஹாரஸ்த சங்வர்தன சமிதி (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(1994, சனவரி மாதம் 28 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1994 சனவரி மாதம் 28 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு 7, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 75*

*தபாற் செலவு : ரூபா 1.00*

**1994 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, வலகெதர சிறீநிவாஸ புஸ்தகால பிரிவேன் விஹாரஸ்த சங்வர்தன சமிதி (கூட்டிணைத்தல்) சட்டம்.**

*[1994, சனவரி மாதம் 28 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

ச. வ—ஓ. 62/92

**வலகெதர சிறீநிவாஸ புஸ்தகால பிரிவேன் விஹாரஸ்த சங்வர்தன சமிதியைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்.**

"வலகெதர சிறீநிவாஸ புஸதகால விஹாரஸ்த சங்வர்தன சமிதி" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான கழகமொன்று, அதன் உறுப்பினர்களால் உடன்பட்டுக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க, சொல்லப்பட்ட கழகத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் கொண்டுநடாத்தி நிறைவேற்றும் நோக்கத்துக்காக, இதற்குமுன்னர் வலகெதரவில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும்: முன்னுரை.

அத்துடன் சொல்லப்பட்ட கழகமானது எப்பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் அது தாபிக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாகக் கொண்டு நடாத்தி நிறைவேற்றி வந்துள்ளதாதலாலும், கூட்டிணைக்கப்பட அது விண்ணப்பித்துள்ளதாதலாலும், அத்தகைய விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாதலாலும் :

ஆகவே, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1994 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, வலகெதர சிறீநிவாஸ புஸ்தகால பிரிவேன் விஹாரஸ்த சங்வர்தன சமிதி (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும், (இதனகத்துப்பின்னர் "கழகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) வலகெதர சிறீநிவாஸ புஸ்தகால பிரிவேன் விஹாரஸ்த சங்வர்தன சமிதியின் உறுப்பினர்களாக தற்போதுள்ள அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன்பின்னர் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும், "வலகெதர சிறீநிவாஸ புஸ்தகால பிரிவேன் விஹாரஸ்த சங்வர்தன சமிதி" என்ற பெயர் மகுடத்தின்கீழ், இடையறு வழியுரிமை கொண்ட (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருத்தல் வேண்டும். அத்துடன் எல்லா நீதிமன்றங்களிலும் அப்பெயர்கொண்டு அது வழக்குத் தொடரலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடரவும்படலாம்; பொது இலச்சினை ஒன்றை வைத்திருப்பதற்கும் பயன்படுத்துவதற்கும் அது விரும்பியாங்கு அதனை மாற்றுவதற்கும் உள்ள பூரண தத்துவமும் அதிகாரமும் உடையதாதல் வேண்டும். வலகெதர சிறீநிவாஸ புஸ்தகால பிரிவேன் விஹாரஸ்த சங்வர்தன சமிதியைக் கூட்டிணைத்தல்.

3. கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :— கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

(அ) வலகெதர சிறீநிவாஸ புஸ்தகால பிரிவேன் விஹாரையின் கட்டிடங்களைப் பேணுதலும், ஒரு வழிப்பாட்டறை உட்பட புதிய கட்டிடங்களை நிர்மாணித்தலும்;

(ஆ) இடப்பிரதேசத்திலுள்ள மக்களின் சமய, சமூக, கல்வி, கலாசார நலன்களை ஊக்குவித்தல்;

(இ) சிங்களம், பாளி, சமஸ்கிருதம், பௌத்தமதம், ஆயுர்வேத மருத்துவம், தொழில்நுட்பம் என்பவற்றில் மகா சங்கத்தினருக்கும் பொதுமக்களுக்கும் கற்கைநெறிகளை ஏற்பாடு செய்வதன் மூலம் கல்வியின் முன்னேற்றத்தை ஊக்குவித்தல்;

(ஈ) தர்ம போதனையில் நன்கு பரிச்சயமுள்ள புத்த பிக்குமார்களைப் பயிற்றுவித்தல்;

(உ) சிறீ உபாதன தர்மப் பாடசாலையையும், தாயக்க சபையையும் வலகெதர சிறீநிவாஸ புஸ்தகால பிரிவேன் விஹாரையுடன் இணைந்த ஏனைய பௌத்த சங்கங்களையும் மீள ஒழுங்கமைத்துச் சீர்திருத்துதல்;

(ஊ) ஏழை மாணவர்களுக்கு புத்தகங்கள், சாதனங்கள், உடை, கடன்கள், மானியங்கள் என்பன வழங்குவதன் மூலம் அவர்களுக்கு உதவுதல்;

(எ) நூலகங்களைத் தாபித்துப் பேணுதல்,

(ஏ) அதன் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதுடன் பிரசங்கங்கள், பௌத்த பூஜைகள், சேத்திய பூஜைகள், போதி பூஜைகள், தேவ பூஜைகள், தியான வகுப்புகள், கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள், விரிவுரைகள் மற்றும் சுற்றுலாக்களை நடாத்துதல்;

(ஐ) இளைஞர்களுக்கு தொழில் முறைக்குரிய பயிற்சி நெறிகளை நடாத்துதல்;

(ஒ) சுயதொழில் வாய்ப்பைப் பெறக்கூடிய வகையில் இளைஞர்களுக்கு அறிவுரைகளும், பயிற்சியும், உதவியும் ஏற்பாடு செய்தல்;

(ஓ) இயற்கை அனர்த்தங்கள் இடம்பெறும் வேளைகளில் அருகதையுள்ள ஆட்களுக்கு உதவிகள் வழங்குதல்;

(ஔ) பிக்குமாருக்கும், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு உதவிநல்கும் தன்னிச்சையான ஒழுங்கமைப்புகளுக்கும் நிதி அல்லது வேறு உதவி வழங்குதல்;

(க) கைத்தொழில் மற்றும் கமத்தொழில் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளோருக்கு தொழில்நுட்ப அறிவுறுத்தல்களும் சாதனங்களும் வழங்குதல்;

(ங) சுயதொழில் வாய்ப்பு, மற்றும் இறக்குமதி, ஏற்றுமதிகளை அல்லது உற்பத்தி செய்தல் என்பவற்றை ஊக்குவிப்பதில் பகிரங்க மற்றும் தனியார் துறை நிறுவனங்களுடன் இணைந்து செயலாற்றுதல்;

(ச) பொதுவாக கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தலும் அதன் குறிக்கோள்களை எய்துதலும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

4. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமைவாக, (இதனகத்துப் பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) முகாமைச் சபையொன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும். இச்சபையானது அத்தகைய விதிகளில் ஏற்பாடு செய்யப்படக்கூடியவாறான அதற்கிணங்கத் தெரிவு செய்யப்பட்ட, நியமிக்கப்பட்ட அல்லது பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பதவிதாங்குநர்களையும் அத்தகைய வேறு ஆட்களையும் கொண்டதாக இருக்கும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைச் சபை இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு உடனடியாக நேர்முந்திய நாளன்று பதவிவகிக்கின்ற கழகத்தின் முகாமைச் சபையாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

5. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைவாக, கூட்டுத்தாபனமானது, பின்வருவனவற்றைச் செய்வதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும்:—

(அ) ஏதேனும் கொள்வனவு, கொடை, நன்கொடை, மரணசாதனக் கையளிப்பு என்பனவகையாக அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடிய ஏதேனும் அசைவுள்ளதும் அசைவற்றதுமான ஆதனத்தைக் கொள்ளுதல், வைத்திருத்தல் அத்துடன் அபிவிருத்தி செய்தல்;

(ஆ) ஏதேனும் அத்தகைய ஆதனத்தை விற்றல், ஈடுவைத்தல், குத்தகைக்குக் கொடுத்தல், கொடுத்து மாற்றுதல் அல்லது வேறு வகையாகக் கையுதிர்த்தல்;

(இ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றும் நோக்கங்களுக்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தல், தொழிலுக்கமர்த்துதல், ஊதியமளித்தல், அவர்கள்மீது ஒழுங்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தல் அத்துடன் அவர்களைப் பதவியிலிருந்து விலக்குதல்;

(ஈ) உள்ளூர் அல்லது வெளியூர் மூலங்களிலிருந்து காசாகவோ பொருளாகவோ மானியங்கள், நன்கொடைகள் அல்லது கொடைகள் பெறுதல்;

(உ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றும் நோக்கத்துக்காக இலங்கையில் அல்லது ஏதேனும் வெளிநாட்டில், கூட்டுத்தாபனத்தின் கிளைகளைத் தாபித்தல்;

(ஊ) வங்கிக் கணக்குகளைத் திறத்தலும், இயக்குதலும், மூடுதலும், பிணைப்பொறுப்பாக அல்லது அத்தகைய பிணைப்பொறுப்பின்றி, பணம் கடன் எடுத்தல் அல்லது திரட்டுதல்;

(எ) சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிணைப்பொறுப்புக்களில் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான பணங்களை முதலீடு செய்தல்; அத்துடன்

(எ.) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதன் இடை நேர்விளைவான அல்லது நிறைவேற்றுவதற்கு உசிதமான அத்தகைய மற்றெல்லாச் செயல்களையும் விடயங்களையும் செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

6. (1) பின்வருவன கூட்டுத்தாபனத்தின் நிதியத்துள் அடங்குதல் வேண்டும்:—

(அ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று சங்கத்தின் வரவில் இருக்கும் எல்லாப் பணங்களும்; இவை அனைத்தும் அத்தேதியிலிருந்து கூட்டுத்தாபனத்துக்குக் கைமாற்றப்பட்டனவாக இருக்கும்; அத்துடன்

(ஆ) இச்சட்டம் தொடங்கும் தேதியின் பின்னர் கூட்டுத்தாபனத்துக்குச் சேரக்கூடிய எல்லாப் பணங்களும்.

(2) கூட்டுத்தாபனத்தின் நிதியத்தின் வரவில் இருக்கும் எல்லாப் பணங்களும் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்வதிலும் அதன் குறிக்கோள்களை எய்துவதிலும் உறப்படும் செலவுகளைக் கொடுத்துத் தீர்ப்பதிலும் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

7. (1) ஒரு பொதுக் கூட்டத்திலும் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டுக்குக் குறையாத பெரும்பான்மை கொண்டும், இச்சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாயிராத விதிகளை, பின்வரும் கருமங்கள் எல்லாவற்றிற்கும் அல்லது அவற்றுள் எதற்காகவேனும் காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டபூர்வமானதாதல் வேண்டும்:—

(அ) சபை உறுப்பினர்களைத் தெரிவுசெய்தல், நியமித்தல் அல்லது பெயர்குறித்து நியமித்தலும் அவர்களின் தத்துவங்களும் கடமைகளும், பணிகளும்;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் பதவிதாங்குநர்களினதும் முகவர்களினதும் மற்றும் சேவையாளர்களினதும் அதிகாரங்கள், நடத்தை, கருமங்கள் மற்றும் கடமைகளும் ;

(இ) சபைக் கூட்டங்களில் அவதானிக்கப்படவேண்டிய நடைமுறையும், அதன் கூட்டங்களைக் கூட்டுதலும், நடாத்துதலும், அத்தகைய கூட்டங்களின் நேரங்களும், இடங்களும், அறிவித்தலும், நிகழ்ச்சிநிரலும், அதற்கான கூட்ட நடப்பெண்ணும், அதில் அலுவல்களைக் கொண்டு நடாத்துதலும்;

(ஈ) சபையினதும் கூட்டுத்தாபனத்தினதும் உறுப்பாண்மைக்கான தகைமைகளும் தகைமையீனங்களும்;

(உ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும், முகாமை செய்தலும் அதன் நிதிகளின் கட்டுக்காப்பும் கணக்குகளைப் பேணுதலும், அவற்றின் கணக்காய்வும்; அத்துடன்

(ஊ) பொதுவாக கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தலும், அதன் குறிக்கோள்களை எய்துதலும்.

(2) முதலாம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட விதி எதுவும் அதே போன்ற கூட்டத்திலும் அதேமுறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கெதுவும் சேர்க்கப்படலாம், அல்லது நீக்கப்படலாம்.

(3) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று வலுவிலிருக்கும் சங்கத்தின் விதிகள், அவை, இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாக விராத அளவுக்கு இப்பிரிவின் கீழாக்கப்பட்ட விதிகளாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) கூட்டுத்தாபன உறுப்பினர்கள் அனைவரும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கு அமைந்தவர்களாதல் வேண்டும்.

8. இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று உள்ளதான கழகத்தின் எல்லாக்கடன்களும் பொறுப்புக்களும் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தினல் கொடுத்துப் பொறுப்பு விடுவிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன் அந்நாளன்று கழகத்துக்கு வருமதியான எல்லாக் கடன்களும் அத்துடன் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப் பணங்களும் உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதல் வேண்டும். கழகத்துக்குப் போமதியான கடன்களும் வருமதியான கடன்களும்.

9. கூட்டுத்தாபனத்தின் இலச்சினை கூட்டுத்தாபனச் செயலாளரின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும். அத்துடன் செயலாளரினதும் கூட்டுத்தாபனத்தின் விதிகளில் ஏற்பாடுசெய்யப்படக்கூடியவாறன அத்தகைய வேறு எண்ணிக்கையினரான சபை உறுப்பினர்களின் சமூகத்திலன்றியும் எத்தன்மைத்தான சாதனம் எதிலும் பொறிக்கப்படுதல் ஆகாது. இவர்கள் தாம் சமூகமாயிருந்தனர் என்பதற்கடையாளமாக தமது பெயர்களை எழுதி அச்சாதனத்தில் ஒப்பமிடுதல் வேண்டும். அவ்வாறு ஒப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியொருவராக ஒப்பமிடுவதிலிருந்தும் தனிவேறானதாதல் வேண்டும். கூட்டுத்தாபனத்தின் இலச்சினை எவ்வாறு பொறிக்கப்படல் வேண்டும் என்பது.

10. இச்சட்டத்தில் அடங்கியுள்ளது எதுவும், இச்சட்டத்தில் கூறப்பட்டவர்கள், அவர்கள்மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின் கீழ் உரிமைகோருபவர்கள் ஆகியோர் தவிர்ந்த, குடியரசின் அல்லது ஏதேனும் அரசியல் குழுவின் அல்லது கூட்டிணைப்பின் அல்லது வேறு எவரேனும் ஆளின் உரிமைகளைப் பங்கப்படுத்தலோ பாதித்தலோ ஆகாது. குடியரசினதும் ஏனையோர்களினதும் உரிமைகளைப் பேணல்.

11. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.